ஸ்ரீ கணபதி சில்க்ஸ்
தரம். தலைமுறைக்கும்...

THE COVAI MAIL

RNI: TNBIL/2014/55455.

ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER

Postal Reg.No: CB/123/2021-23.

Vol No. : 9 Issue No. : 28 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, Oct 9 - 15, 2022, 4 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-

மெர்சலான தீபாவளி கொண்டாட்டம்

ஸ்ரீ கணபதி சில்க்ஸ்®

தரம். தலைமுறைக்கும்...

சங்கரன்கோவில் ✆ 222153 | ஒப்பணக்கார வீதி - கோவை ✆ 2303944 | கிராஸ் கட் ரோடு - கோவை ✆ 2233445 | தேனி ✆ 250222 | வத்தலகுண்டு ✆ 297333

BAJAJ FINSERV EMI வசதி உண்டு

FOLLOW US ON

• www.sriganapathysilks.com

Valet car parking facility available

SHOP NOW

கடவுள் வழிபாட்டில் மலர்கள் வைப்பதன் முக்கியத்துவம் என்ன?

தி கோவை மெயில்

மலர் என்றால் அழகு, வண்ணம், வாசம், மென்மை... இன்னும் அடுக்கிக்கொண்டே சொல்லாம். இந்த அழகியல் பார்வையைத் தாண்டி, மலர் என்பது ஆன்மீகத்தில் முக்கியமான அர்ப்பணிப்பாக வைக்கப்படுகிறது. மலரில் மறைந்துள்ள ஆன்மீக முக்கியத்துவத்தை இந்த பதிவு விளக்குகிறது!

சத்குரு:

மலர்களின் செயல் என்ன?

மலர்கள் மிகவும் முக்கியமானவை. வழிபாட்டில் அவை இடம் பெற்றாலும் சரி, இடம் பெறாவிட்டாலும் சரி.

தாவரவியல் கண்ணோட்டத்துடன் பார்த்தால், மலர்கள் இனப்பெருக்கத்திற்கான கருவி. நீங்கள் மலர்களைப் பற்றி எவ்வளவு உயர்வாக வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளலாம். ஆனால் மலரைப் பொறுத்தவரை, அது தேனீக்களை கவர்ந்திழுத்து, இனப்பெருக்கம் செய்யவே முற்படுகிறது. மலர்கள் அதை மட்டும்தான் செய்கின்றன. இந்த உண்மை மலர்களுக்கு மட்டுமல்ல. இந்த உலகம் முழுவதையும் உயிரியல் நோக்கில் பார்த்தால், உயிரோடு வாழ்வதும், இனப்பெருக்கம் செய்வதும், பாதுகாத்துக் கொள்வதும்தான் அடிப்படை செயல்களாக உள்ளன. இது ஒரு கண்ணோட்டம். இன்னொன்று, மலரை, செடியினுடைய உயிர்த்தன்மையின் மிக உச்சமான வெளிப்பாடு என்று பார்ப்பது.

மலரைப் பற்றிய கண்ணோட்டங்கள்

ஒரு மலர் ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு விதமான அர்த்தத்தைக் கொடுக்கிறது. ஒருவருக்கு, மலர் இறைவனின் திருமுகமாகத் தோன்றலாம். ஒரு விஞ்ஞானிக்கோ, அது இனப்பெருக்கத்திற்கான ஒரு முயற்சியாக இருக்கலாம். ஆனால் ஒரு ஞானிக்கு, மலர் என்பது இறைமையின் உச்சகட்ட வெளிப்பாடாகத் தோன்றும். ஆனால் மலர்களை மட்டும் ஏன் நாம் வழிபாட்டிற்குப் பயன்படுத்துகிறோம்? ஏன் கற்களையோ இலைகளையோ அல்லது வேறு எதையோ பயன்படுத்துவதில்லை?

ஒரு செடியின் மலர், இலை, விதைகள், பழம் என்று கவனித்துப் பார்த்தால், அவற்றுள் மலர்தான் மிகவும் மென்மையானது, மிகக் குறுகிய காலத்திற்கே இருப்பது. அது காலையில் இருந்தது போல் மாலையில் இருப்பதில்லை. அது அந்த அளவிற்கு, மென்மையானது.

ஒரு மனிதரைப் பாருங்கள். அவர் ஒன்றை நோக்கி, தன்னை எப்படி ஈடுபடுத்திக் கொள்கிறார் என்று பாருங்கள். ஒருவர் தன்னிடம் இருப்பதைப் பன்மடங்காகப் பெருக்குவதை விரும்புபவர் என்றால், அவர் நாட்டம் முழுவதும் விதையில் தான் இருக்கும். ஒருவருடைய விருப்பம் இருப்பிடம் மற்றும் பாதுகாப்பு என்றால், அவர் மரத்தின் தண்டிலும், கிளைகளிலும் தான் கவனம் கொள்வார். ஒருவர் இன்பத்தில் நாட்டம் கொண்டவராக இருந்தால், அவர் மரத்தின் கனியில் மட்டும் தான் கவனமாக இருப்பார். மாஞ்செடியை நட்டுவைத்து விட்டு, "அதன் கனிகள் எத்தனை சுவையாக வருமோ!" என்று சிந்தனை செய்து கொண்டே இருப்பவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு செடியின் வேரிலோ, இலையிலோ, மற்ற எந்த பாகத்திலுமோ கவனம் இல்லை. செடிக்கு என்ன நடக்கிறது என்பதிலும் கவனம் இல்லை. அவர்கள் பழத்திற்காக மட்டுமே காத்திருக்கிறார்கள்.

ஒரு செடியின் மலர், இலை, விதைகள், பழம் என்று கவனித்துப் பார்த்தால், அவற்றுள் மலர்தான் மிகவும் மென்மையானது, மிகக் குறுகிய காலத்திற்கே இருப்பது. அது காலையில் இருந்தது போல் மாலையில் இருப்பதில்லை. அது அந்த அளவிற்கு, மென்மையானது.

உள்நிலை மலர்தல்

ஆன்மீக வளர்ச்சியை எப்போதும், 'மலர்ச்சி' என்று தான் குறிப்பிடுவார்கள். ஆன்மீக வளர்ச்சியை 'உள்நிலையில் மலர்தல்' என்று தான் சொல்கிறோமே அன்றி, 'உள்நிலையில் கனிதல்' என்று சொல்வதில்லை. 'கனி'யை எப்போதுமே ஒரு செயலின் முடிவாக, நிறைவாகத்தான் பார்க்கிறோம். அந்தக் கனியிலிருந்து ஏதோ ஒன்று உங்களுக்கு கிடைத்திட வேண்டும். கனி என்பது அந்த எதிர்ப்பார்ப்பை, அத்தகைய அம்சத்தை அதிகம் உள்ளடக்கியதாக இருக்கிறது. இன்பம் துய்த்தல் என்பதின் ஆழமான அம்சத்தை அது உள்ளடக்கியதாக இருக்கிறது.

ஆனால், வாழ்க்கையை அதன்போக்கில் அப்படியே ஏற்று மகிழ்பவர், மலர்களைக் கண்டு மகிழ்ச்சி கொள்கிறார். மலர்கள் உயிரின் மிக எளிமையான, அழகான, அற்புதமான வெளிப்பாடு. அதைத் தவிர்த்து, அதற்கு எவ்வித முக்கியத்துவமோ, பயனோ இல்லை.

உச்சக்கட்ட வெளிப்பாடு!

பயன் கொடுப்பது என்ற அடிப்படையில் பார்த்தால் மலருக்கு அதிக பயன் இல்லைதான். ஆனால் ஒரு செடியின் உயிர்தன்மையில் மலர் என்பது மிகமிக அழகிய பரிமாணம். மலர்தான் செடியினுடைய உயிர்த்தன்மையின் உச்சக்கட்ட வெளிப்பாடு.

அதனால்தான் இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டுமென்றால், நீங்கள் உயிர்த்தன்மையின் உச்சக்கட்ட வெளிப்பாடான ஒன்றை, அர்ப்பணிக்க நினைக்கிறீர்கள். உங்களிடம் இருக்கும் ஏதோ ஒன்றை அர்ப்பணிக்க விரும்புகிறீர்கள் என்றால், உங்களுடைய இதயத்தை பிடுங்கிக் கொடுக்கத்தான் நினைப்பீர்கள், உங்கள் கால் கட்டை விரலை அல்ல. அப்படித்தானே? உங்களிடம் இருப்பதிலேயே மிகவும் உயர்ந்த பரிமாணத்தைக் கொடுக்கத்தான் நீங்கள் விரும்புகிறீர்கள். அதனால்தான், ஒரு செடியில், வேர், தண்டு, கிளைகள், என்று பல இருந்தாலும், மலர் தான் மிகவும் உயர்ந்த பரிமாணம் என்பதால், அதையே நாம் அர்ப்பணிக்கிறோம்.

மலரைப் போல மலருங்கள்!

எனவே உங்கள் வாழ்வில், நீங்கள் உங்களுக்குச் செய்து கொள்ளக் கூடியதில் மிகப் பெரியது, வேராகவோ, இலையாகவோ, தண்டாகவோ, மாறுவதல்ல ஒரு மலராக மாறுவது தான். மலர் சிறிதும் பயனற்றது தான், ஆனால் மிக எளிதாக அனைவராலும் அணுகக் கூடியது. நீங்கள் ஒரு பூச்செடியைக் கடந்து நடந்து போனால், நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், பூவின் மணம் உங்கள் நாசிகளுக்குள் நுழையும்.

உங்கள் விருப்பத்தை அது கேட்பதில்லை. இல்லையா? நீங்கள் அதைக் கண்டுகொள்ளவில்லை என்றாலும், உங்களுக்குள் ஏதோ நிகழ்வதை உங்களால் உணர முடியும். செடியின் மற்ற எந்த தன்மைக்கும் இந்தத் திறன் இருப்பதில்லை. எனவே ஆன்மீக செயல்முறையின் நோக்கமே நீங்கள் மலர் போல மாறுவது தான். மலர் ஒரு குறியீடாக மாறியிருக்கிறது.

மலர் என்பது அர்ப்பணிப்புத் தன்மைக்கான இன்னொரு சொல்லாகவே கூறப்படுகிறது.

கே.எம்.சி.ஹெச் சார்பில்

மார்பக புற்றுநோய் பரிசோதனை முகாம்

தி கோவை மெயில்

கே.எம்.சி. ஹெச். மருத்துவமனையில் பெண்களுக்கான மார்பக பரிசோதனை முகாம் அக்டோபர் 3 முதல் 29 ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

இது குறித்து கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை மார்பக புற்றுநோய் கதிரியக்க நிபுணர் டாக்டர் ரூபா கூறியதாவது: மார்பக புற்றுநோய் நகர்ப்புற பெண்களை அதிகம் பாதிக்கிறது. இந்தியாவில் 2 பெண்களில் ஒருவருக்கு முற்றிய நிலையில்தான் மார்பக புற்றுநோய் கண்டுபிடிக்கப்படுகிறது. மார்பக புற்றுநோயை ஆரம்ப நிலையில் கண்டறிவதன் மூலம் பாதிக்கப்பட்ட பெண்ணின் உயிரை காப்பாற்ற முடியும். பொதுவாக எல்லா புற்றுநோய்களையும் எந்த அறிகுறியும் இல்லாமல், துவக்க நிலையில் கண்டுபிடிக்க முடியாது. ஆனால் அறிகுறி இல்லாமலிருந்தாலும் கூட மார்பக புற்றுநோயை பரிசோதனை மூலம் கண்டுபிடித்து விடலாம்.

டாக்டர் ரூபா

பெண்கள் எந்த வயதினராக இருந்தாலும், மார்பு, மார்பகங்களில் வலி, மார்பகத்தில் கட்டி (வலியுடன் அல்லது வலியில்லாமலும்), மார்பகக்காம்புகளில் கசிவு, மார்பகக்காம்பு பின் நோக்கி செல்லுதல், அக்குள்களில் வீக்கம் ஆகிய அறிகுறிகளில் ஏதாவதொன்று இருந்தாலோ, இரத்தம் சம்பந்தமான நெருங்கிய சொந்தத்தில் யாருக்காவது மார்பக புற்றுநோய் இருத்தாலோ உடனடியாக மருத்துவரை அணுகவும். இத்தகைய அறிகுறிகள் இல்லாவிட்டாலும், 40 வயதிற்கு மேற்பட்ட ஆரோக்கியமுள்ள பெண்களும் இந்த பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும். மேலும் பெண்கள் தங்களது சுய பரிசோதனை மூலம் கண்டுபிடிக்க முடியாத ஆரம்ப நிலை கட்டிகளை கூட மேமோகிராம் பரிசோதனையில் கண்டுபிடித்துவிடலாம். இது ஒரு எக்ஸ்ரே முறையை போன்ற பரிசோதனையாகும். இதன் மூலம் மார்பகத்தில் கட்டி உருவாவதற்கு முன்பான சிறிய மாற்றங்களை கூட முன்கூட்டியே கண்டுபிடித்து விடலாம்.

கண்டுபிடிக்கப்படும் 90 சதவீத கட்டிகள் புற்றுநோய் இல்லாத கட்டிகளாகவே இருக்கும். 10 சதவீத கட்டிகள் மட்டுமே புற்றுநோயாக இருக்கும். இவற்றை முன்கூட்டியே கண்டுபிடிக்கும்போது முழுமையாக குணப்படுத்திவிடலாம். மார்பகத்தை அகற்றாமலே கட்டிகளை மட்டும் அகற்றும் அளவிற்கு நவீன சிகிச்சை முறை வந்து விட்டது.

கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையில் தேர்ந்த மருத்துவ குழுவினரை கொண்ட மார்பக பரிசோதனை மையம் ஒரே இடத்தில் சர்வதேச தரத்தில் அமைந்துள்ளது. உலகின் தலைசிறந்த, அதிநவீன மருத்துவ வசதிகளை தன்னகத்தே கொண்டுள்ளது. வித்தியாசத்தை துல்லியமாக பார்க்க உதவும் முப்பரிமாண வசதியுடன் கூடிய மேமோகிராம் பரிசோதனை கருவி, திசு விறைப்பு தன்மையை அளவிட உதவும் அல்ட்ராசோனோகிராபி இயந்திரம், 3ஜி எம்ஆர்ஐ, வேக்குவம் அசிஸ்டட் பயாப்சி ஆகியவை அவற்றில் அடங்கும்.

இங்கு உலக மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு பெண்களுக்கான மார்பக பரிசோதனை முகாம் அக்டோபர் 3 முதல் 29 ஆம் தேதி வரையிலான இம்மாதம் முழுவதும் நடக்கிறது. இதில் ரூ.3400 கட்டணமுள்ள டிஜிட்டல் மேமோகிராம் ரூ.1000 சலுகை கட்டணத்திலும், ரூ.1100 கட்டணமுள்ள ஹைடெக் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் ரூ.500 சலுகை கட்டணத்திலும் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் ஆலோசனையும் வழங்கப்படுகிறது.

இத்தகைய பரிசோதனை மூலம் மார்பக புற்றுநோய் உள்ளதா என்பதை கண்டறியலாம். பாதிப்பு நிலை துவக்கத்திலேயே கண்டறியப்பட்டால் மேல் சிகிச்சைகள் மேற்கொண்டு மார்பக புற்றுநோயை முழுமையாக குணப்படுத்தலாம் என்று கூறினார்.

மேலும் விபரங்களுக்கும், பரிசோதனைக்கான முன்பதிவிற்கும், போன் : 87548 87568, 0422 4324151 எண்களை தொடர்பு கொள்ளலாம்.

சிறுவனுக்கு நுண்துளை அறுவை சிகிச்சை செய்து

பி.எஸ்.ஜி மருத்துவமனை சாதனை

குணம் அடைந்த சிறுவனுடன் (இடமிருந்து 2 வது) பி.எஸ்.ஜி. மருத்துவமனையின் இருதய அறுவை சிகிச்சை நிபுணர் அனந்தநாராயணன், (வலமிருந்து) பி.எஸ்.ஜி.ஐ.எம்.எஸ்.ஆர் மருத்துவமனை, அட்மினிஸ்ட்ரேஷன் பொது மேலாளர் ஜெகநாதன், அருகில் குழந்தைகள் இருதய நல மருத்துவர் வினோத் துரைசாமி.

தி கோவை மெயில்

ராஜஸ்தானை சேர்ந்த 5 வயது சிறுவனுக்கு பிறவிலேயே இருதயத்தில் குறைபாடு இருந்ததால் சிரமப்பட்டு வந்தான். இதனால் அடிக்கடி சளி, காய்ச்சல் ஏற்பட்டு உடல் எடை கூடாமல் இருந்தது.

சிறுவனுக்கு (ஏட்ரியல் செப்டல் குறைபாடு) நோய் கண்டறியப்பட்டு அறுவை சிகிச்சை தான் செய்ய வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டது. எனவே பி.எஸ்.ஜி. மருத்துவமனையின் இருதய அறுவை சிகிச்சை நிபுணர் அனந்தநாராயணன், சிறுவனுக்கு நுண்துளை அறுவை சிகிச்சை மூலம் வெற்றிகரமாக சிகிச்சை அளித்தார். தற்போது சிறுவன் குணம் அடைந்து நலமாக வீட்டிற்கு சென்று விட்டான்.

பி.எஸ்.ஜி மருத்துவமனை மற்றும் ரோட்டரி கிளப் சாய் சிட்டி இடையே உள்ள ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் சிறுவனுக்கு இலவசமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் தமிழகம் மட்டுமில்லாமல் பிற மாநிலங்களில் வசித்து வரும், இருதய குறைபாடு உள்ள குழந்தைகளுக்கும் இலவச சிகிச்சை வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

நவராத்திரி விழா

கோவை, ஆர்.எஸ்.புரம் ஸ்ரீ அன்னபூரணி திருகோவிலில் உள்ள வேத பாடசாலையில் நவராத்திரியை முன்னிட்டு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

சாலை பாதுகாப்பு நிகழ்ச்சி

கோவை ஸ்ரீ கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சாலை பாதுகாப்பு உயிர் அமைப்பின் சார்பில் உயிர் கிளப் சேர்ந்த பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு சாலை பாதுகாப்பு பயிற்சியினை கோவை மாநகர காவல்துறை ஆணையர் பாலகிருஷ்ணன் துவக்கி வைத்தார். உடன் கிருஷ்ணா கல்வி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் மலர்விழி, காவல்துறை போக்குவரத்து இணை ஆணையர் மதிவாணன், ஆர்.டி.ஓ சத்யகுமார் ஆகியோர் உள்ளனர்.

கோவையில் மகாத்மா காந்தி நினைவகம் திறப்பு

தி கோவை மெயில்

கோவை போத்தனூரில் மகாத்மா காந்தி நினைவகத்தின் திறப்பு விழா நடைபெற்றது. இந்த நினைவகத்தை காந்தியவாதியும் சமூக ஆர்வலருமான கிருஷ்ணம்மாள் ஜகந்நாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்துவைத்தார்.

மகாத்மா காந்தியடிகள் பல்வேறு நிகழ்ச்சிகள், கூட்டங்களில் பங்கேற்பதற்காக மூன்று முறை கோவைக்கு வந்துள்ளார். அதன்படி, 1934 ஆம் ஆண்டு கோவை வந்த காந்தியடிகள் போத்தனூரில் உள்ள ஜி.டி.நாயுடுவின் குடும்ப இல்லத்தில் இரண்டு நாள்கள் (பிப்ரவரி 6, 7) தங்கியுள்ளார். தற்போது இந்த இல்லம் ஜி.டி. நாயுடு குழுமம் சார்பில் மகாத்மா காந்தி நினைவகமாக மாற்றப்பட்டுள்ளது.

ஜி.டி. குழுமங்களின் நிர்வாக இயக்குனரும் மகாத்மா காந்தி நினைவகத்தின் துணைத் தலைவருமான ஜி.டி. கோபால், இந்த விழாவில் மூன்று பேருக்கு முக்கியமாக நன்றி செலுத்த வேண்டும்; முதலாவதாக எனது தந்தை, அடுத்து, கிருஷ்ணராஜ் வானவராயர் மற்றும் சங்கர் வானவராயர், குமரகுரு தொழில்நுட்ப கல்லூரியினருக்கும், ஜிடி குழுமத்தினருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு செயல்பாடுகளுடன் இதை உருவாக்கியுள்ளனர் எனப் பேசினார்.

விழாவிற்கு கோவை குமரகுரு கல்வி குழுமங்களின் தலைவரும் மகாத்மா காந்தி நினைவகத்தின் தலைவருமான கிருஷ்ணராஜ் வாணவராயர் தலைமையேற்று கூறியதாவது: மகாத்மா காந்தி அகிம்சா முறையில் சுதந்திரம் வாங்க முடியும் என்பதை உலகுக்கு உணர்த்தியவர். 85 ஆண்டுகளாக கேட்பரற்று கிடந்த இந்த இடம், புத்துணர்வு பெற்றுள்ளது. இந்த நினைவிடத்தில், குழந்தைகளுடன் வாருங்கள். இங்கு அமர்ந்து மகாத்மா காந்தியை உணர்ந்து தியானம் செய்ய வேண்டும் எனக் கூறினார்.

விழாவில் கிருஷ்ணம்மாள் ஜகந்நாதன் பேசியதாவது: திருப்பூர் குமரன் பிறந்த மண் இது. திருப்பூர் குமரன் போன்றே காந்தியும் நம் ரத்தத்தில் ஊறிப்போனவர். மனிதனாக பிறந்த ஒவ்வொருவருக்கும் ஆற்ற வேண்டிய கடமை உள்ளது. அதை சீரோடும் சிறப்பாக நிறைவேற்றிட, காந்திய வழியில் தொடருவோம் என தெரிவித்தார்.

THE COVAI MAIL

RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2021-23.

Vol No. : 9 Issue No. : 28 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, Oct 9 - 15, 2022, 4 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-

கே.ஜி மருத்துவமனையில்

சிறுதுளை சிகிச்சையில் நலமாகும் இருதயம்

சு.ரம்யா
தி கோவை மெயில்

கே.ஜி மருத்துவமனை தலைவர் மற்றும் மருத்துவருடன் சிறப்பு நேர்காணல்

முன்பிருந்த காலத்தை ஒப்பிட்டு பார்க்கையில் தற்போது நமது வாழ்க்கை முறை மாற்றத்தால், நோய்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. அதேசமயம் அறிவியலின் வளர்ச்சியால் அதற்கான தீர்வுகளும் ஒருபுறம் நமக்கு கிட்டி வருகின்றன. இந்திய அளவில் இருதய நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இளம் வயதுடையோர்களிடையே கூட மாரடைப்பு ஏற்படுகிறது.

ஆனால் சிகிச்சை முறையில் ஏற்பட்டுள்ள நவீன தொழில்நுட்ப முன்னேற்றத்தால் வலி இல்லாமல் மார்பு பகுதியில் சிறு துளையிடும் (சிறுதுளை) அறுவை சிகிச்சை கே.ஜி மருத்துவமனையில் மேற்கொள்ளப்படுகிறது. கோவையில் முதல்முறையாக இந்த சிகிச்சை இங்கு தான் அறிமுகம் செய்யப்பட்டது. இப்படி ஒரு வரவேற்பு பெற்ற சிகிச்சை குறித்தும், அதன் பயன்கள் பற்றியும் மருத்துவமனையின் அனுபவம் மிக்க இருதயவியல் மருத்துவர்கள் பகிர்ந்து கொண்ட தகவல்:

உலகத்தரம் வாய்ந்த சிகிச்சைகள் கே.ஜி.,யில் உள்ளது!

- **டாக்டர் பக்தவத்சலம்** தலைவர், கே.ஜி.மருத்துவமனை

மனிதன் தன் அன்றாட வேலைகளை சுறுசுறுப்பாக செய்ய இருதயம் நன்றாக இயங்குவது அவசியம். இருதயம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்றால் அதனை பாதுகாப்பாக வைத்திருப்பது முக்கியம். ஆரம்பத்தில் இருதயத்தை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளாமல் பிரச்சினை ஏற்பட்டபின் மருத்துவமனைகளில் அவதிப்படுவதை காணமுடிகிறது.

உடற்பயிற்சியின்மை, புகை பழக்கம், கொழுப்பு நிறைந்த உணவுகளை உண்ணுதல், உடற்பருமன் ஆகியவற்றை கொண்டிருந்தால் மாரடைப்பு ஏற்படும். ஆண்கள், பெண்கள் என இரு பாலினரையும் இது பாதிக்கும். இந்தியாவில் ஆண்டிற்கு 1 கோடி பேரும், தமிழகத்தில் சுமார் 10 லட்சம் பேரும் மாரடைப்பினால் பாதிக்கப்படுகின்றனர்.

நெஞ்சு, தாடை மற்றும் கைகளில் வலி, அதிகப்படியான வியர்வை வந்தால் அது மாரடைப்பிற்கான அறிகுறி. நெஞ்சு வலி ஏற்படும் சமயத்தில் அனைத்து பரிசோதனை வசதிகளும் உள்ள உரிய இடத்தில் சிகிச்சை பெறுவது அவசியமான ஒன்று.

கே.ஜி மருத்துவமனையின் இருதய துறையில் அனுபவம் மிக்க பல மருத்துவர்கள் பணிபுரிகின்றனர். கோவையில் கே.ஜி மருத்துவமனை 48 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. உலகத்தரம் வாய்ந்த சிகிச்சைகளை தன்னிடம் கொண்டுள்ள இம்மருத்துவமனை கோவையின் இருதய துடிப்பாக உள்ளது.

நவீன சிறுதுளையில் அதிக நன்மை உள்ளது!

இருதய பைபாஸ் அறுவை சிகிச்சை

-டாக்டர் அருண்குமார்
இருதய நுரையீரல் அறுவை சிகிச்சை நிபுணர்

ரத்தக் குழாய் அடைப்பு ஏற்பட காரணம்:

பரம்பரையாக மரபணு குறைபாடு அல்லது தந்தைக்கு கொழுப்புசத்து அதிகமாக இருந்து அது குழந்தைக்கும் வரும் பட்சத்தில் அடைப்பு ஏற்படலாம். மற்ற நாட்டினரை ஒப்பிடும் போது, இந்தியாவிலுள்ள ஆண்களுக்கு இருதயத்தில் அடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. மேலும் வயதாகும் போது இருதயத்தில் ரத்தக் குழாய் அடைப்பு ஏற்பட சாத்தியக்கூறுகள் உள்ளன.

புகை பிடிக்கும் பழக்கம், உடற்பருமன், உடல் உழைப்பு குறைவாக இருப்பவர்கள், சர்க்கரை நோய், கொழுப்பு சத்து, உயர் ரத்த அழுத்தம், மன அழுத்தம் உள்ளவர்களுக்கு இருதய நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பெண்களுக்கும் வயதாகும்போது ஹார்மோனல் சமநிலை குறைவதனால் இருதய பாதிப்பு ஏற்படும்.

திடீரென நெஞ்சு பகுதி, தாடை, தோள்பட்டையில் வலி ஆகியவை மாரடைப்பின் அறிகுறி. இதனை அலட்சியம் செய்யாமல் மருத்துவரை அணுகி உரிய சிகிச்சை எடுத்துக் கொள்வது அவசியமான ஒன்று.

சிறுதுளை சிகிச்சையின் பயன்கள் :

சிறுதுளை சிகிச்சைக்கு பின்னர் வலி இருக்காது. தழும்பு பெரிய அளவில் இருக்காது. தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்பு, ரத்த இழப்பு, மிகவும் குறைவு. தங்களது இயல்பு வாழ்க்கைக்கு விரைவிலேயே திரும்பி 2 வாரங்களிலேயே அனைத்து வேலைகளையும் செய்யலாம்.

வயதானவர்கள், புகை பழக்கம் கொண்டவர்களுக்கு திறந்த நிலை இருதய அறுவை சிகிச்சை செய்வது சற்று சிக்கலானது. ஆனால் சிறுதுளை முறையில் சிக்கல் ஏற்படாது. இந்த முறையில் குழந்தைகளுக்கு பிறவிலேயே ஏற்படும் இருதய குறைபாடுகளை சரி செய்ய முடியும். சிறுதுளை அறுவை சிகிச்சை மூலம் பைபாஸ் அறுவை சிகிச்சை, வால்வு மாற்று அறுவை சிகிச்சை அல்லது வால்வை பழுது பார்ப்பது ஆகியவற்றையும் சரி செய்யலாம். இந்த சிகிச்சைக்கு வயது வரம்பு இல்லை.

தவறாமல் இதை பின்பற்றுங்கள் :

இருதய அறுவை சிகிச்சைக்கு பின்பு மருந்துகளை தவறாமல் எடுத்துக் கொள்வதுடன், குறிப்பிட்ட கால இடைவெளியில் மருத்துவரிடம் செல்வது முக்கியம். சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், கொழுப்பு ஆகியவற்றை பரிசோதனை செய்து கட்டுக்குள் வைக்க வேண்டும்.

அறுவை சிகிச்சைக்கு பிறகு நிச்சயம் வாழ்க்கை முறையில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். குறைந்தது 3 அல்லது 4 கிலோமீட்டர் தினசரி நடைபயணம் மேற்கொள்ளவேண்டும். காய்கறிகளை அதிக அளவில் சேர்த்துக் கொண்டு அசைவ உணவு, எண்ணெய் பதார்த்தம், இனிப்புகளை தவிர்ப்பது நல்லது.

வெளி உணவை தவிர்த்து, வீட்டு உணவையே எடுத்துக் கொள்ள வேண்டும். மன அழுத்தம், கோபம், சண்டையிடுவதை தவிர்த்து, தியானம், யோகா செய்வது நன்மை தரும். மனதை அமைதியாக வைத்துக் கொள்ளும் முறைகளை கையாளுவது முக்கியமானது.

மேலும், தூக்கமின்மைக்கு முக்கிய காரணமான மன உளைச்சலை தவிர்த்து விட்டாலே உறக்கம் வரும். தூங்க செல்லும் ஒரு மணி நேரத்திற்கு முன்பு தொலைபேசி, டிவி ஆகியவற்றை பார்க்காமல், நீண்ட நேரம் விழித்து இருக்காமல் சீக்கிரம் தூங்க வேண்டும். நல்ல தூக்கம் இருந்தால் ஆயுள் நீண்டு இருக்கும் என்பது ஆய்வுகளின் மூலம் நிரூபணமாகியுள்ளது.

சிறுதுளை அறுவைசிகிச்சை :

இருதயத்தில் கொழுப்பு, தொற்று, வீக்கம் ஆகிய காரணங்களினால் ரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டு மாரடைப்பு வரலாம். இந்த ரத்தக் குழாய்களில் ஒன்று அல்லது இரண்டு அடைப்புகள் ஏற்பட்டு இருப்பின் ஆஞ்சியோகிராம் செய்யப்பட்டு ஸ்டென்ட் பொருத்தப்படும். சிலருக்கு ஸ்டென்ட் வைப்பதில் சிக்கல் இருக்கும், அவர்களுக்கு திறந்த நிலை பைபாஸ் அறுவை சிகிச்சை முறையில், அதாவது, நெஞ்சுப் பகுதி எலும்புகளை துண்டித்து அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படும். இதில் புது ரத்தக் குழாய்களை இணைத்து இருதயத்திற்கு ரத்த ஓட்டம் மீண்டும் அளிக்கப்படும்.

இதற்கு அடுத்தபடியாக, திறந்த நிலை பைபாஸ் அறுவை சிகிச்சையிலேயே இருதயத்தை நிறுத்தாமல் துடித்துக் கொண்டிருக்கும் நிலையில் (Beating heart bypass surgery) அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இதில் நோயாளியின் மீளும் தன்மை அதிகமாக இருக்கும்.

ஆனால் இதுபோன்று நெஞ்சுப்பகுதி எலும்பை துண்டித்து அறுவை சிகிச்சை செய்தால் சில மாதங்கள் வேலை செய்ய முடியாது, தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளது உள்ளிட்ட காரணங்களினால் திறந்த இருதய அறுவை சிகிச்சை செய்து கொள்வதில் மக்களிடம் பயம் நிலவியது.

அதேசமயம் அதிக எண்ணிக்கையிலான அடைப்புகள் இருந்து, அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்ற நிலையில், அதுகுறித்து பயம் கொள்பவர்களுக்கு நவீன முறையில் கே.ஜி.மருத்துவமனையில் சிறுதுளை இருதய அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. இருதயத்தில் இருக்கும் ரத்தக் குழாய்களில் எங்கு அடைப்பு ஏற்பட்டாலும் இந்த முறையினை பயன்படுத்தி கே.ஜி.,யில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

வலதுபுற மார்புக்கு கீழ் உள்ள விலா எலும்புகளுக்கு இடையில் ஒரு சிறுதுளை இடப்பட்டு நவீன கருவிகளை கொண்டு இருதய துடிப்பை நிறுத்தாமலேயே சிறுதுளை சிகிச்சை செய்யப்படுகிறது. கே.ஜி மருத்துவமனையில் வெற்றிகரமாக இதுவரை 300 க்கும் அதிகமானோருக்கு இந்த சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் நலமாக உள்ளனர்.

கே.ஜி மருத்துவமனையில் இதுவரை 300க்கும் மேற்பட்டவர்களுக்கு வெற்றிகரமாக சிறுதுளை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

KG

நவீன "சிறுதுளை"
இருதய அறுவை சிகிச்சை

சிறுதுளை சிகிச்சைகள்
- இருதய பை - பாஸ் சர்ஜரி
- வால்வு மாற்று அறுவை சிகிச்சை
- பிறவி இருதய குறைபாடு (ASD, VSD)

நன்மைகள்
- வலி குறைவு
- சிறிய தழும்பு மட்டுமே
- விரைவில் வேலைக்கு செல்லலாம்

இதுவரை 300 அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளது

0422-222 2222
96261 96262

கே.ஜி. மருத்துவமனை, கோவை

Annapoorna now at Kuniamuthur

(From top left) Malarvizhi, Chairman & Managing Trustee, Sri Krishna Institutions inaugurates the hotel. Vanitha Mohan, Chairperson, Pricol lighting the lamp. Rangaswamy Naidu, Chairman G.R.G Groups inaugurates the Anugraha Banquet Hall followed by, Hajji Inayadhulla, President, Sunnat Jamat Federation inaugurates the AC Dining Hall.

The Covai Mail

Annapoorna opened its brand new 19th outlet at Kuniamuthur, Coimbatore. Malarvizhi, Chairman & Managing Trustee, Sri Krishna Institutions inaugurated the new outlet in the presence of Chairman Ramasamy, Vice Chairman D.Sundararajan, Managing Director D.Srinivasan, Joint Managing Director R.Venkatesh, Executive Directors R.Karthikeyan, Jegan S Damodaraswamy, Vivek Srinivasan, special invitees and Annapoorna staff members.

The lighting of the lamp was presided over by Vanitha Mohan, Chairperson, Pricol. Nantha Kumar, Industrialist from Coimbatore initiated the first sales handing it over to Abdul Jaffar, Nisa Motors.

Hajji Inayadhulla, President, Sunnat Jamat Federation inaugurated the AC Dining Hall that can accommodate upto 250 people for occasional events. Following the same, Rangaswamy Naidu, Chairman GRG Groups inaugurated the Anugraha Banquet Hall.

Establishing its finest customer service for more than 50 years, the new outlet is built with elegant interiors and is spacious enough to occupy more than 200 people. Built over an area of 13,500 sq. ft., the outlet facilitates a parking slot for about 100 vehicles.

Not just about the ambience but the outlet offers 190 varieties of sweets, 60 varieties of spicy savories and cakes.

SIMA elects new office bearers

The Covai Mail

Recently, SIMA Cotton Development and Research Association (SIMA CD & RA) organized its 47th Annual General Meeting.

G.Venkataramachandran, Managing Director of Laven Technoblend Limited, Coimbatore, Dr.S.K.Sundararaman, Managing Director of Shiva TexyarnLimited, Coimbatore and Durai Palanisamy, Executive Director, Pallava Textiles P Limited, Erode were elected as Chairman, Deputy Chairman and Vice-Chairman respectively.

In a Press Release issued by the new Chairman of SIMA CD & RA, G.Venkataramachandran has stated that the Association would play a vital role in augmenting cotton production, productivity and improving quality, the need of the hour for reviving the predominantly cotton-based textile industry from the unforeseen crisis.

Venkatramachandran has thanked the Chief Minister of Tamil Nadu for allocating Rs.7.24 crores for Sustainable Cotton Mission for the year 2022-23. He further thanked the Chief Minister for indicating some funds for the promotion of ELS cotton and distribution of SIMA's kapas plucker at a concessional rate to the cotton farmers in Tamil Nadu.

Shopsy grows by 6x

The Covai Mail

Shopsy recently concluded the ninth edition of The Big Billion Days (TBBD). This festive season, customers on Shopsy scaled by 6X, compared to the previous TBBD, with a strong adoption recorded from Tier-2 and Tier-3 cities.

Shopsy has grown by 2X in the overall customer base and units sold further strengthening its presence across the country. Shopsy introduced a recommendation engine based on user preference which helped buyers customize the discovery of products to match their interests. This resulted in over 2.5X growth in the units sold on the platform.

Reportedly, 50% of the customers on Shopsy are first-time e-commerce shoppers, half of whom are from Tier 3+ markets such as Bilaspur, Bankura, Gaya, Karnal, Muzzaffarpur, and Medinipur. Followed by metros and Tier 1 customers, each comprising 15% of the segment, while Tier 2 accounted for about 8% of the diverse pie.

The platform enables access to 150 million products across 800+ categories for customers across India.

Quaker launches modern breakfast 'Oats Muesli'

The Covai Mail

Quaker® has entered the Ready-to-eat (RTE) cereal segment with a new delicious, innovative, and modern breakfast offering - Quaker Oats Muesli. With the nutritious goodness of 5 grains and 22% fruit, nuts and seeds, Quaker Oats Muesli offers a crunchy, multi-textural, and wholesome breakfast experience in two flavourful variants - Fruit & Nut and Berries & Seeds. Quaker Oats Muesli is developed to provide 'Fuel for the Real Fit' and is a source of protein & fibre that gives a good start to the day. Expressing her thoughts on the launch, Sonam Bikram Vij, Associate Director and Category Head, Quaker, PepsiCo India, said, "Convenience is key in a post-pandemic environment, and the need for convenience foods is on the rise…it is all about striking a balance between one's active lifestyle and consuming nutritious food. Complementing this trend is the fact that the ready-to-eat cereal market has been witnessing an upward growth trend in India, with demand for muesli constantly increasing".

LIC launches LICMF Multicap Fund

The Covai Mail

LIC Mutual Fund announces the launch of LICMF Multicap Fund ("LICMF Multicap"), an open-ended equity scheme. LICMF Multicap Fund would invest a minimum of 25 per cent each in Large, Mid and Small Cap stocks, with a balance of 25 per cent.

The New Fund Offer (NFO) opens on Thursday, October 6, 2022, and would close on Thursday, October 20, 2022. The scheme would reopen for ongoing subscription from Wednesday, November 2, 2022.

The unique investment framework would calculate the adjusted market valuations by taking macro cues. It entails calculating lower-end and higher-end PE and arriving at an optimum portfolio-level PEG Band.

KPRIET offers session on 'Career Opportunities in Japan'

The Covai Mail

KPR Institute of Engineering and Technology (KPRIET) organised a special interactive session on 'Career Opportunities in Japan'.

KPRIET enables the students to pursue higher education in eminent foreign Universities and employment in native speaker's companies in the home country by ensuring that the students opt for International certification and obtain it.

Employment opportunities for Indian students in Japan-based companies highly focus on technical skills and proficiency in Japanese. The Centre for Foreign Languages, KPRIET, has been offering Japanese language courses and internships in Japan-based Indian Companies. All the enrolled students obtained International certification by clearing the N5 level and preparing for the N4 level.

KPRIET's Centre for Foreign Languages (CFL) offers training in five languages: German, Japanese, French and Spanish. The centre orients the students towards the opportunities to learn a new language and trains the students based on their specific needs, alongside exploring career opportunities in their respective countries.

SRCW wins 'Naari Shakti' award

Students of Sri Ramakrishna College of Arts & Science for Women (SRCW) won the National level Smart India Hackathon 2022. Three teams from Computer Science and one team from Microbiology Department were shortlisted for the SIH Grand Finale 2022. The Augmented Reality (AR) idea won among the 34 participating teams in the final round with a cash reward of Rs.20,000/- and 'Naari Shakti' Award. D. Lakshminarayanaswamy, Managing Trustee, SNR Sons Charitable Trust and Dr. K. Chitra, Principal of the college felicitated the winning team.

Bharathiar University receives OUR RUSA STAR AWARD

The Covai Mail

The state project directorate RUSA had instituted the "OUR (Optimum Utilization of Resources) RUSA STAR AWARD" to felicitate the beneficiary institutions of RUSA 1.0 and RUSA 2.0, under various parameters such as the creation of infrastructure in the form of buildings and labs, utilization of funds, adherence to accounting procedures and also timely submission of reports.

The award process was organized by B. S. Vijayalakshmi, Project Manager, Tamilnadu State Project Directorate office of RUSA 2.0, Chennai and Dr Vanathi Vembar, Research Officer, Tamilnadu State Project Directorate office of RUSA 2.0, Chennai.

Bharathiar University was awarded the "OUR RUSA STAR AWARD". Col. Prof. Dr. P. Kaliraj, Vice-Chancellor of Bharathiar University and Dr. Rupa Gunaseelan, Coordinator, RUSA, Syndicate member of Bharathiar University received the award from Dr.K.Ponmudy, Tamil Nadu Minister of Higher Education, in the presence of D. Karthikeyan, Secretary of Higher Education, Tamilnadu.

There are 155 projects executed under RUSA 2.0 of Bharathiar University. The major breakthroughs in of implementation of RUSA 2.0 at the university are 5 books and 29 journal publications, 4 training modules, and 6 conceptual frameworks which are published in reputed national and international publications.

Col. Prof. Dr. P. Kaliraj, Vice-Chancellor of Bharathiar University receives the award from Dr.K.Ponmudy, Tamil Nadu Minister of Higher Education.

KIT receives "IGEN SDG ACTION AWARDS"

The Covai Mail

The department of Electrical and Electronics Engineering of KalaignarKarunanidhi Institute of Technology (KIT) Coimbatore, in association with KIT- ENSAV club jointly organized the "IGEN SDG ACTION AWARDS".

During the event, Dr.L.Ramesh President of Institution of Green Engineers(IGEN), Dr.M.Saravana Kumar, Dean- Anna University Regional Campus, Coimbatore and Dr.L.Ashok Kumar, Chairman of IAEMP, Coimbatore Chapter, Professor in EEE, PSG College of Technology, Coimbatore, explained on the objectives to start Energy Saving Clubs in Educational Institutions & creating Energy Saving Ambassadors, efforts to save and use the available electricity economically and, to use bio-energy to control carbon dioxide in the atmosphere and improve the environment respectively.

Pongalur N.Palanisamy, Founder Chairman of KIT, Indu Murugesan, Vice-chairperson, Dr.N. Mohandass Gandhi, Principal, Dr. M. Ramesh, Vice Principal, Dr. S. Suresh, Dean-Student Affairs, Dr.K. Ramasamy, Dean of Academics and Research, Dr.R. Mythili, Head of the Electrical and Electronics Department, R.Thamizharasan and T.Barath Kumar, KIT- ENSAV club and Energy 99 challenge coordinators, and faculty members of KIT were part of the event.

Avinashilingam receives 'Best University Award 2022'

The Covai Mail

Avinashilingam Institute for Home Science and Higher Education for Women(Deemed to be University), Coimbatore has been conferred the prestigious 'Best University (Food Science) Award 2022' at National Nutri Cereal Convention organized by Indian Council of Agricultural Research, Indian Institute of Millets Research, Ministry of Agriculture & Farmer's Welfare, Government of India.

Dr. S. Kowsalya, Registrar and Professor, Department of Food Science and Nutrition received the award on behalf of Avinashilingam Women University from Singireddy Niranjan Reddy, Agriculture Minister, Governor of Telangana. This award is in recognition for contribution in Education and R&D on Millets under POSHAK Anaaj Award - 2022.

ITF urges TN businesses to seek PLI 2.0

The Covai Mail

Indian Texpreneurs Federation (ITF) listed the various advantages that are available for textile businesses under the Production Linked Incentive Scheme (PLI) in the recently released PLI 2.0 for the Apparel and Home Textile Sector and urged the businesses from Tamil Nadu to make good use of the scheme.

Prabhu Dhamodharan, Convener, ITF said that the first PLI scheme focused more on improving the manufacturing and export prowess of Indian industries concentrating on select Man-Made Fibres (MMF) Under the PLI 1.0 scheme, incentives will be provided for 5 years by the Central Government to companies/businesses that meet the eligibilities which include a minimum investment commitment ranging between Rs. 100 crore and Rs. 300 crores from them in MMF.

The participation from Tamil Nadu to make use of this scheme was minuscule. Hence ITF and similar associations urged the Centre to provide a PLI Scheme that even MSMEs and Cotton based product manufacturing companies can make use of. An appeal was made during the Union Textile Minister Piyush Goyal's visit.

Following that, a draft of PLI 2.0 with simplified conditions opened doors for Cotton based product manufacturers. He said close to 500 companies in Western Tamil Nadu can become eligible to apply under this scheme.

Prabhu Dhamodharan, Convener, ITF, addressing the press along with (left) Rohit Bhotra, Consultant, KPMG and Sunil, Executive Committee Member, ITF.

This scheme is not limited to exporters but to all the domestic companies that meet the requirements laid in the draft. The scheme is now open for all products including cotton (61,62 and 63 HS codes), and companies can choose their preferred products for manufacturing via PLI 2.0.

Dhamodharan mentioned that the 60+ companies that received approval in PLI 1.0 scheme have received better visibility and their brand value has increased in the eyes of international clients, He said US customers are looking at suppliers who can contribute to their needs besides China, and it is the right time for Indian Textile Industries to make use of the opportunities.

To Advertise in
THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL

Disclaimer: The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006 and Printed at Sri Saraswathy Printers, 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006. Editor: K.C.Srinivasan